III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.177/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 31-01-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Sasikala | Caste | : |
| Husband Name | : C.K.Babu | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் இரண்டாம் வாதி. நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 13 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. **15.07.1999 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல்** (அது வா.த,சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **21.03.2006 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்** (அது வா.த,சா. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **திருவள்ளூர் முதன்னை மாவட்ட நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.64/2006 ன் தீப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்** (அது வா.த,சா. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **மேல்முறையீட்டு எண்.665/2009 ன் தீப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்** (அது வா.த,சா. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்** (அது வா.த,சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **முதலாம் பிரதிவாதியிடமிருந்து திரும்பி வந்த அஞ்சல் உறை** (அது வா.த,சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **பிரதிவாதிகள் 2 முதல் 4 அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள்** (அது வா.த,சா.7 **வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது). **16.03.2018 தேதியிட்ட கடிதத்தின் அலுவலக நகல்** (அது வா.த,சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது). **அதை முதலாம் பிரதிவாதி பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை** (அது வா.த,சா.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

**அதற்கு முதலாம் பிரதிவாதி அனுப்பிய பதில்** (அது வா.த,சா.**10** ஆக குறியீடு செய்யப்படுகிறது). **வா.தசா.10 த்திற்கு நாங்கள் அனுப்பிய மறு பதில்** (அது வா.த,சா.**11** ஆக குறியீடு செய்யப்படுகிறது). **அதை முதலாம் பிரதிவாதி மற்றும் அவரது வழக்கறிஞர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள்** (அது வா.த,சா.**12 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது). **தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழின் கணினி நகல்** (அது வா.த,சா.**13** ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(கற்றறிந்த **முதலாம்** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).